FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319463

1. District : மாவட்டம் Madurai PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 01/2026 Date: நாள் 12.02.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of Corrupt (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7(a) of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018.

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 10.02.2026 at 13.00 hrs to 11.02.2026 at 14.45 hrs and 14.50 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : 12.02.2026 Time : நேரம் 08.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்

(c) General Diary Reference : Entry No(s) 12.02.2026 Time : நேரம் 08.45 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: – 45 km South. O/o. Village Administrative Officer, Mathipanur Bit – 1 Thirumangalam Tk, Madurai
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. P. Muthupriya குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : K Pandurangam தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Poultry farm (g) Address : முகவரி M. Kulipatti, Mathipanur (Po), Thirumangalam Tk., Madurai Dt.,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Kasi, Village Administrative Officer, Mathipanur Bit – 1, Thirumangalam Tk, Madurai Dt.,

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Seperate sheet attached pages 3 to 6

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12/02/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

12/02/2026

15. Date & Time of despatch to the court: 12/02/2026 09.35
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. JEYAPRIYA
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police, VAW PS, Madurai.

பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 12.02.2026-ஆம் தேதி காலை 08.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்தபோது, மதுரை திருமங்கலம் தாலுகா மதிப்பனூர் அஞ்சல், M. குழிப்பட்டி என்ற முகவரியில் குடியிருந்து வரும் பாண்டுரங்கன் என்பவரின் மனைவி திருமதி. முத்துப்பிரியா என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P. முத்துப்பிரியா, க/பெ. பாண்டுரங்கன், M.குழிப்பட்டி, மதிப்பனூர் அஞ்சல், திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் M.குழிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் நர்சிங் படிப்பு படித்துவிட்டு, தற்பொழுது நாட்டுக்கோழி பண்ணை வைத்துள்ளேன். நான் எங்கள் ஊரைச் சேர்ந்த தங்கதுரை என்பவருக்கு சொந்தமான திருமங்கலம் தாலுகா மதிப்பனூர் கிராமம் பிட்-1-ல் சர்வே எண்.107/1C2-வில் உள்ள 23 செண்டிலிருந்து, 15 செண்ட் நிலத்தை, விலைக்கு வாங்க முடிவு செய்து, தங்கதுரை கடந்த 2016-ம் வருடம் இறந்து விட்டதால் அவரது வாரிசுகளான தங்கதுரை மனைவி கிளியம்மாள் மற்றும் அவரது மகள்கள் கவிதா, கமலம் அவரது மகன் சின்னன் ஆகியோரிடமிருந்து கடந்த 19.12.2025-ம் தேதி அன்று ரூ.75,100/-க்கு விலைக்கு வாங்கி அதனை எனது பெயரில் அன்றைய தினமே திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.11159/2025 ஆக பதிவு செய்தேன். நான் அன்றைய தினமே அந்த நிலத்திற்கான பட்டா மாறுதலுக்கான கட்டணத்தையும் செலுத்தி விட்டேன். அதன் பேரில் கிரையம் முடித்த அன்றைய தினமே எனது மொபைலில் பட்டா மாற்றத்திற்கான விண்ணப்பம் திருமங்கலம் தாலுகா அலுவலகத்தில் பெறப்பட்டதாக குறுஞ்செய்தி வந்தது. சுமார் 10 நாளைக்கு முன்பு மொபைல் எண்: 8680965409 என்ற எண்ணிலிருந்து எனது மொபைல் எண்: 9952337282 என்ற எண்ணிற்கு போன் வந்தது, நான் போனை ஆன் செய்து பேசியபோது அவர் தனது பெயர் காசி என்றும், அவர் மதிப்பனூர் பிட்-1 VAO வாக பணி புரிவதாகவும், நான் வாங்கிய நிலத்திற்கு பட்டா வழங்குவது சம்பந்தமாக அவருக்கு கோப்பு வந்துள்ளதாகவும், எனது பெயரில் பதிவு செய்த அசல் பத்திரத்தை எடுத்து வரும்படி கூறினார். அதற்கு நான், எனக்கு இன்னும் அதன் அசல் பத்திரம் கிடைக்கவில்லை என்றும், அந்த நிலத்தை களப்பணி செய்தபிறகு தருவதாக திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சொன்னதாக அவரிடம் கூறினேன். அதற்கு அவர் அசல் பத்திரம் வாங்கியபின் அவரை

வந்து பாருங்கள் என்று என்னிடம் கூறினார். அதன் பிறகும் பலமுறை என்னை மொபைலில் அழைத்து அசல் பத்திரம் வாங்கியாச்சா ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்டார். நான் பண்ணையில் வேலையாக இருந்ததால் உடனே பத்திரம் வாங்க முடியவில்லை. ஆகையால் கடந்த 06.02.2025ம் தேதி வெள்ளிக்கிழமை நான் திருமங்கலம் பத்திர ஆபிசிற்கு சென்று எனது அசல் பத்திரத்தை வாங்கினேன். பின்னர் கடந்த 10.02.2026ம் தேதி காலையில் VAO திரு.காசி அவர்கள் என்னை அவருடைய மொபைல் எண்ணிலிருந்து எனது மொபைலில் அழைத்து என்னம்மா அசல் பத்திரம் வாங்கிவிட்டாயா ஏன் என் ஆபிசிற்கு வரவில்லை என்று கேட்டார். நானும் வாங்கிவிட்டேன் சார் இன்னைக்கு வந்துவிடுகிறேன் என்று சொல்லி அன்றைய தினம் மதியம் சுமார் 01.00 மணியளவில் மதிப்பனூர் ஊரில் உள்ள பிட்-1 VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO காசி அவர்களை சந்தித்து அவர் கூறியபடி எனது பத்திரத்தின் ஜெராக்ஸ் மற்றும் அதற்கான ஈ.சி நகலையும் அவரிடம் கொடுத்தேன். அவர் அதனை வாங்கி பார்த்து விட்டு இதில் எல்லாம் சரியாக உள்ளது என்றும், உங்களது நிலத்தை உட்பிரிவு செய்து உங்கள் பெயரில் பட்டா கிடைக்க நான்தான் அதற்கு பரிந்துரை செய்து தர வேண்டும், அதற்காக நீங்கள் ரூ.6,000/-ம் எனது செலவிற்கு கொடுக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார். நான் அதற்கு இது அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் இல்லம்மா இது உங்களுடைய நிலத்தை நான் உட்பிரிவு செய்து உங்கள் பெயருக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்வதற்கு எனக்கு செலவிற்கு கொடுக்கவேண்டிய பணம் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சார் நானே கஷ்டத்தில் இருக்கிறேன், கொஞ்சம் பார்த்து செய்யுங்கள் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் இதெல்லாம் உனக்கு ஒரு பெரிய தொகையாமா, எனக்கு நாளை காலையில் இங்கு வந்து பணம் கொடுத்தால் உடனே ஏற்பாடு செய்வேன், இல்லையென்றால் நீ அலைந்து கொண்டுதான் இருக்கவேண்டும் என்று சொன்னார். நான் சரி சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். ஆனால் நான் என்ன செய்வதென்று தெரியாமல் நேற்று 11.02.2026ம் தேதி காலையில் அவர் சொன்னபடி அவரது அலுவலகத்திற்கு செல்லவில்லை. ஆனால் அவர் என்னை அவரது மொபைலில் இருந்து இரண்டு, மூன்று முறை எனது மொபைலுக்கு அழைத்தார். நான் பயந்து அவரது அழைப்பை எடுக்கவில்லை. பின்னர் நேரில் சென்று அவரிடம் பணம் இல்லாமல் பட்டா வழங்க கேட்கலாம் என நினைத்து நேற்று மதியம் சுமார் 02.45 மணியளவில் அவரது அலுவலகத்திற்கு சென்று அவரை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம், ஏன் நீ

காலைல வரவில்லை, எனது போனையும் எடுக்கவில்லை என்று கோபமாக கேட்டார். அதற்கு நான் அவரிடம் சார் என்னால் பணம் ரெடி பண்ண முடியவில்லை, கொஞ்சம் பணத்தை குறைத்துக் கொள்ளுங்கள் சார் என்று கெஞ்சி கேட்டேன். ஆனால் அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.6,000/-த்தை நாளைக்கு காலையில் எனது அலுவலத்திற்கு கொண்டு வந்து என்கிட்ட கொடுத்தால் தான் உனக்கு பட்டா சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று கூறிவிட்டார். நானும் சரிங்க சார் என்று கூறிவிட்டு அவரது ஆபிசிலிருந்து கிளம்பிவிட்டேன். நான் கிளம்பிய 5 நிமிடத்திற்குள் அவர் மீண்டும் என்னை அவரது மொபைல் போனிலிருந்து எனது மொபைலில் அழைத்து, நான் அவரிடம் ஏற்கனவே கொடுத்திருந்த எனது பத்திர நகல் அவரது ஆபீசில் காணவில்லை என்றும், அதனால் நாளை (12.02.2026) காலையில் பணம் கொண்டு வரும்போது இன்னொரு ஜெராக்ஸ் காப்பி எடுத்து வரும்படி என்னிடம் கூறினார். நான் அவரிடம் சார் பத்திர ஜெராக்ஸ்சை கண்டிப்பாக கொண்டு வருகிறேன், பணம் மட்டும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று மீண்டும் கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் என்னம்மா நீ சொன்னதையே சொல்லிக்கொண்டு இருக்கிறாய் சரி உனக்காக வேண்டுமென்றால் 500 ரூபாய் குறைத்து கொள்கிறேன், நீங்கள் நாளை (12.02.2026) பகல் 12.00 மணிக்குள் ரூ.5,500/-யை எனது அலுவலகத்திற்கு வந்து என்னிடம் கொடுங்கள் என்றும், பணம் கொடுக்கவில்லை என்றால் உங்களுக்கு பட்டா கிடைக்காது நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாக கூறிவிட்டு போனை துண்டித்துவிட்டார். நான் வீட்டிற்கு வந்து பணம் ஏற்பாடு செய்ய முயன்றேன், மிகவும் சிரமமாக இருந்தது. பின்பு நேற்று மாலை சுமார் 05.45 மணியளவில் VAO காசி அவர்கள் வேறு புதிய மொபைல் எண்ணிலிருந்து எனது மொபைல் போனில் தொடர்பு கொண்டு என்னிடம் நீங்கள் நாளை பகல் 12.00 மணிக்கு கண்டிப்பாக வந்து விடுங்கள், எனக்கு நிறைய வேலை இருக்கிறது இல்லை என்றால் உங்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய முடியாது என்று கூறினார். நான் அவரிடம் கண்டிப்பாக வந்துவிடுகிறேன் என்று கூறினேன். நான் பத்திர பதிவுடன் சேர்த்தே எனது பெயரில் பட்டா மாற்ற விண்ணப்பம் செய்த பின்னரும், எனது பெயரில் வாங்கிய நிலத்திற்கு உட்பிரிவு செய்து எனது பெயரில் பட்டா கிடைக்க பரிந்துரை செய்வதற்கு லஞ்சம் கேட்கும் மதிப்பனூர் பிட்-1 VAO திரு.காசிக்கு லஞ்சம் கொடுப்பதில் எனக்கு விருப்பமில்லை. அதனால் நான் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்க முடிவு செய்து இந்த புகார் மனுவை தயார் செய்து அத்துடன் நான்

ஏற்கனவே VAO விடம் கொடுத்த எனது பெயரில் பதிவு செய்த பத்திரத்தின் ஜெராக்ஸ் மற்றும் அதன் ஈ.சி நகலையும் இணைத்து இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். மேலும் VAO காசி அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,500/-ஐ கொண்டு வந்துள்ளேன். நான் வாங்கிய நிலத்தை உட்பிரிவு செய்து அதற்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்து தருவதற்கு என்னிடம் ரூ.5,500/- லஞ்சம் கேட்கும் மதிப்பனூர் பிட்-1 VAO திரு.காசி அவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXXX P.Muthupriya, 12/02/26.

Sir, Received the typed complaint today 12.02.2026 at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the Accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, V&AC, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 01/2026 u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (C. Jeyapriya) 12/02/2026, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tmt. P.Muthupriya, W/o.Pandurangan, M.Kulipatti, Mathippanur (post), Thirumangalam Taluk, Madurai with enclosures of Copy of the document of Sub-Registrar Thirumangalam in No.11159/2025, dated 19.12.2025 and EC are submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

C. Jeyapriya

(C. Jeyapriya) 12/02/2026
Inspector of Police,
V&AC, Madurai.